

தீரன் சின்னமலை நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் ஓடாநிலையில் உள்ள அவரது நினைவிடத்தில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மமலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கவியரங்கத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்! முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் எழுச்சிக் கவியரங்கம்!

## தலைமை; கே.கே.செல்லபாண்டியன்! எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் – கவிச்சுடர் கவிதைப் பித்தன் – நா.சந்திரபாபு பங்கேற்பு!

புதுக்கோட்டை ஆக.5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் எழுச்சிக் கவியரங்கம் இன்று (5.8.2026 புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் எம்.ஏ. கிராண்ட் ஏ.சி. மஹாலில் நடைபெறுகிறது.

கவியரங்கம் நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ.மரியஎட்வின் வரவேற்புக் கவிதை வாசிக்கிறார்.

தி.மு.கழக மாநில இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் அரிமா நா.சந்திரபாபு கவியரங்கத்தை தொடங்கி வைக்கிறார்.

கவிச்சுடர் கவிதைப் பித்தன் களப்போர் பரணி பாடுகிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் கவியரங்கத்தை தலைமையேற்று நடத்துகிறார்.

கலைஞரின் எழுதுகோல் எனும் தலைப்பில் கவிஞர் வீ.ம. இளங்கோவனும் அம்பேத்கரின் துலாக்கோல் எனும் தலைப்பில் கவிஞர் இரா.தனிக்கொடியும் அண்ணாவின் அளவுகோல் எனும் தலைப்பில் கவிஞர் அறந்தாங்கி வெங்கடேசனும் பாவேந்தரின் திறவு கோல் எனும் தலைப்பில் கவிஞர் வல்லம் தாஜ்பாலும் திருவள்ளுவரின் செங்கோல் எனும் தலைப்பில் கவிஞர் தஞ்சை இராகவ் மகேஷும் பெரியாரின் ஊன்றுகோல் எனும் தலைப்பில் கவிஞர் நஜ்முதீனும் கவி பாடுகின்றனர்.

கவியரங்க நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக இலக்கிய அணி செயலாளர் வி.என்.எம்.பாலு வரவேற்புரை ஆற்றுகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ., டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா, கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாவட்ட அளவைத் தலைவர் அரு. வீரமணி, மாநகரச் செயலாளர் வே.ராஜேஷ் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்றனர்.

நிறைவாக புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் மணிமொழி மனோகரன் நன்றி கூறுகிறார்.

தமிழ்நாட்டில் நகர்ப்புற–கிராமப்புறங்களில்

# அத்தியாவசிய மருந்துகள் கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 5 -

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை பின்வரும் கேள்விகளை கேட்டிருந்தார்.

(a) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி கேந்திராக்களில் (PMBJKs) அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு மற்றும் தடையற்ற விநியோகம் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீடு செய்துள்ளதா; அப்படியெனில், அதன் விவரங்களை ஆண்டு வாரியாக தெரிவிக்கவும்;



(b) தமிழ்நாட்டில் உள்ள அத்தியாவசிய மருந்து வசதிகளின் இருப்பு, இருப்பு வைப்பு மற்றும் சரியான நேரத்தில் நிரப்புதல் ஆகியவற்றைக் கண்காணிக்க நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பொறிமுறையின் விவரங்கள்;

(c) மாநிலத்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, அவற்றின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தை வலுப்படுத்த ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா; அப்படியெனில், அதன் விவரங்கள்;

(d) மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் கூடுதல் PMBJKகள் அங்கீகரிக்கப்பட / அமைக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளதா; மற்றும்

(e) குறிப்பிட்ட மாநிலத்தில் மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அவருக்கு ஒன்றிய இரசாயண மற்றும் உரத்துறை இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

# தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 5-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDS) கீழ் 2014 முதல் 2024 வரை மாநில வாரியாகவும், தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு, விடுவிப்பு, பயன்பாடு, அங்கன்வாடி மையங்கள் மற்றும் தமிழ்நாடு தனது பங்கிற்கு மேல் கூடுதல் நிதி வழங்கியுள்ளதா என்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, கடந்த 2014



முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDS) கீழ் மாநில வாரியாகவும், தமிழ்நாட்டிற்குமான நிதி ஒதுக்கீடு, விடுவிப்பு மற்றும் பயன்பாட்டு விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் முழுமையாக நிதியுதவி பெற்று செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் மற்றும் ICDS திட்டங்களின் எண்ணிக்கை என்ன? 2015 முதல் மாநிலத்தின் கட்டாய பங்களிப்புக்கு மேலாக தமிழ்நாடு கூடுதல் நிதி வழங்கியுள்ளதா? அவ்வாறு வழங்கியிருந்தால் அதன் ஆண்டுவாரியான விவரங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணைய மைச்சர் சாவித்ரி தாக்கூர் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:-

சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0திட்டத்தின் கீழ் மாநில வாரியாகவும், ஆண்டுவாரியாகவும் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் மற்றும் திட்டஙகளின் விவரங்கள் போஷன் டிராக்கர் பொதுத் தகவல் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-15 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் நிதி விடுவித்துள்ளது. அதன்படி, 2023-24ஆம் ஆண்டில் 88,078.90 லட்சமும், 2024-25ஆம் ஆண்டில் 63,847.46 லட்சமும் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக இணைப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேபோல், 2014-15 முதல் 2024-25 வரையிலான அனைத்து ஆண்டுகளுக்குமான மாநில வாரியான நிதி விவரங்களும் இணைப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 என்பது மத்திய அரசு நிதியுதவி வழங்கும் திட்டமாகும். திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களின் பொறுப்பாகும். பயனாளிகளுக்கு சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, மாநில அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனைகள் மற்றும் காணொலி மாநாடுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டத்தின் செலவினப் பகிர்வு விகிதம் குறித்தும் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. சட்டப்பேரவை கொண்ட மாநிலங்களில் ஊதியச் செலவுக்கு மத்திய-மாநில பங்களிப்பு விகிதம் 60:40, துணை ஊட்டச்சத்து செலவுக்கு 50:50 என்றும், வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கு 90:10 என்ற விகிதத்திலும், சட்டப்பேரவை இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு 100% மத்திய நிதி வழங்கப் படுவதாகவும் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்
### ஆகஸ்ட் 5 (1985)



இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.

1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை 'கிண்டி கோபால்' என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.

சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் – ஆக. 7ல்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஆக. 5 -

சேலத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி குறித்து சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர், உலக தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்டு 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழிநின்று கழகம் வளர்த்து, ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தையும் தலைநிமிரச் செய்த தலைவரின் நினைவுநாள் ஆகஸ்டு 7.

தமிழ்கூறும் நல்லுலகில் வாழும் உள்ளங்களுக்கு உவகையூட்டும் ஒரு மந்திரச்சொல் கலைஞர். 96 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தாலும் தமிழ் என்ற ஒரு சொல் இருக்கும் வரை வாழும் உயிரோட்டமுள்ள ஒரு சொல் கலைஞர். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு வகித்து இந்திய அளவில் வியப்புடன் தமிழ் நாட்டை திரும்பிப் பார்க்கச் செய்யும் பல திட்டங்களையும், சட்டங்களையும் நிறைவேற்றியவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

50 ஆண்டுகாலம் கழகத் தலைவராக பொறுப்பேற்று இந்திய ஜனநாயக வரலாற்றில் சாதனை படைத்தவர். களம் கண்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிப் பெற்று இந்திய அரசியலில் எவரும் செய்யாத தனிப் பெறும் சாதனை படைத்து, சட்டமன்ற பணியில் வைரவிழா கண்டவர்.

பத்திரிக்கை, சொற்பொழிவு, இலக்கியம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி என அவர் பங்களிப்பு இல்லாத துறைகளே இல்லை, தொட்டத்துறைகள் அனைத்திலும் சிகரமாக உயர்ந்து நின்றார். இத்தனை திறமைகளையும் ஒருங்கிணைத்த அவரது நிர்வாகத் திறமையால் தமிழ்நாடு வளமும் நலமும் பெற்றது.

இன்று தமிழ்நாடு காணும் கல்வி வளர்ச்சி, உட்கட்டமைப்பு வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர், உழவர் துயர் தீர்க்க நிலச் சீர்திருத்த நில உரிமைச் சட்டம், இலவச மின்சாரம், கூட்டுறவு கடன் தள்ளுபடி, உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனை கூடம், மகளிர் முன்னேற்றம் காண மகளிர் சுயஉதவிக் குழு, அரசு பணிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, நெசவாளர்களுக்கான பணி பாதுகாப்பு, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு டைடல் பூங்காக்கள், எல்காட், சிப்காட் திட்டங்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கை நிறைவேற்றம் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியது, குடிசை மாற்று வாரியம், கைரிக்க்ஷா ஒழிப்பு, கல்வி மருத்துவ கட்டமைப்பு, கிராமங்களுக்கும் சாலை போக்குவரத்து வசதி,

புதிய தொழில் திட்டங்கள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், விடுகள்தோறும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, அடுப்புடன் இலவச எரிவாயு இணைப்பு, பட்டினி சாவு இல்லாத மாநிலம் என்கிற நிலையை அடையச் செய்ய ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி நவீன தமிழ் நாட்டை உருவாக்கிய ஒரு பெரும் சிற்பி. ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக "கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர்" நம் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள்.



தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் ஆகஸ்டு 7ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 08.00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து அமைதிப் பேரணியாக புறப்பட்டு, பெரியார் மேம்பாலம் வழியாக அண்ணா பூங்கா அருகில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

தொடர்ந்து சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் அனைத்து வட்டங்களிலும், பேரூரில் உள்ள அனைத்து வார்டுகளிலும், ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்கள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மலர்மாலை அணிவித்து நினைவை போற்றும் வகையில் மரியாதை செலுத்திட வேண்டும் எனவும், இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள் பொதுக் குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட கழக பிரதிநிதி கள், மாநகர வட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி,

மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, அயலக அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் மீது பற்று கொண்ட பொதுமக்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என கேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு இரா.இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.